

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னையில் நடைபெற்ற ரமேஷ் அவர்களின் மகள் நிரோஷினி –விஷ்ணுபிரசாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பள்ளிக்கரணை ஈரநிலை விவகாரம்: செய்திதாளில் வந்த

# குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை!

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் விளக்கம்!

சென்னை, அக்.29-

சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையில் செய்தி வெளியீடு வருமாறு:-

சென்னை பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்குள், ஒரு அடுக்கு மாடி கட்டிடத் திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் திட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து கீழ்க் கண்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1971 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் தொடர்பான மாநாட்டின் கீழ் நிறுவப்பட்ட ராம்சார் தல, சட்ட செயல்முறையின்படி, 2017 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் (i) சதுப்பு நிலம் /காப்புகாடு, (ii) ராம்சார் தலம் மற்றும் (iii) ஈரநிலம் ஆகியவை மூன்று தனித்தனி மற்றும் வேறுபட்ட வகைப்பாடுகள் "சதுப்பு நிலம்" என்று அறிவிக்கப்படும்.

தமிழ்நாடு வனச்சட்டம், 1882 இன் கீழ் பள்ளிக்கரணை பகுதியில், சுமார் 698 ஹெக்டேர் பரப்பளவு, பள்ளிக்கரணை சதுப்பு நிலக் காப்புக் காடாக 2007 ஆம் அறிவிக்கப்பட்டது. இந்த இடத்தில எவ்விதமான கட்டுமானங்களுக்கும் அனுமதி அளிக்கப்படுவதில்லை. இது வனத்துறைக்கு சொந்தமான பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.

ராம்சார் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள 1248 ஹெக். பரப்பளவில், பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காட்டில் உள்ள 698 ஹெக். நிலமும், உரிய நடைமுறைகளுக்குப் பின்பு வரையறுக்கப்படவுள்ள 550 ஹெக். கூடுதல் நிலமும் அடங்கும். ஈர நில விதிகளின்படி பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காடுகளுக்கு வெளியில் உள்ள நிலப்பகுதிகளை சர்வே எண்களுடன் கண்டறிந்து வரையறுப்பதற்கான நில உண்மை கண்டறிதல் (Ground Truthing) இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஊடகங்களில் குறிப்பிடப்படும் கட்டுமானம் குறித்த நிலத்தின் புல எண்கள் வருவாய்த்துறை ஆவணங்களின்படி இத்தகைய தனியார் பட்டா நிலங்கள் ஆகும்.

இப்பணிகளை, ஒன்றிய அரசாங்க நிறுவனமான, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM) தேர்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் எல்லைகளை வரையறுக்கும் பணி நவம்பர் 2024ல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, தேசிய நிலையான கடற்கரை மேலாண்மை மையம் (NCSCM), பள்ளிக்கரணை காப்புக்காடு ராம்சார் தலத்திற்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தை (IMP) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இம்மேலாண்மைத் திட்டமானது, சர்வே எண்களின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்தல், டிஜிட்டல் வரைபடத்தில் நிலப் பயன்பாடு, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 இன் விதி 7 மற்றும் ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, பத்தி 62 இன் கீழ் அனுமதிக்கப்பட வேண்டிய அல்லது ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய செயல்பாடுகளின் பட்டியலை தயாரித்தல் (அனைத்து சம்பந்தப்பட்ட நபர்கள் பங்கேற்புடன்) உள்ளடக்கியது.

ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017, அத்தியாயம் XIII, 66 ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களின்படி.,பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"All Ramsar Sites, deemed covered under these Rules, shall also be notified as per the process laid out in paragraphs 57-64. This is proposed to ensure that the site boundaries are properly delineated and that knowledge about the same is available in the public domain. It is advised that the information in the 'Brief Document' may be consistent with the Ramsar Site Information Sheet (RSIS) submitted to the Ramsar Convention during site designation or updated thereafter."

இதன்படி, ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதலில் மேலே உள்ள பத்தி 66 இன் படி, ராம்சார் தலத்தை அறிவிக்கும் செயல்முறை, ராம்சார் தலத்திற்குள் உள்ள சர்வே எண்கள் உட்பட வரைபடம் மற்றும் திட்டத்தை பொது களத்தில் வைப்பதாகும் என்பது தெளிவாகிறது. மேலும், பத்தி 63 இன் படி ராம்சார் தலமாக அறிவிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, இதனை 60 நாட்களுக்குள் ஒரு பொது ஆலோசனைக்கு உட்படுத்துவது என்ற செயல்முறையும் வரையறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பத்தி 64 ல், குறிப்பிட்டுள்ளவாறு ஆட்சேபனைகள் தெரிவிக்கும் நபர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் அல்லது பரிந்துரைகளை பரிசீலித்து அதனை நிவர்த்தி செய்ய மாநில அரசுக்கு 240 நாள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ஈரநில விதிகளின்படி பள்ளிக்கரணை ஈரநில அறிவிப்பு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் பட்டா நிலங்கள் என்பதால், செய்தித்தாள் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் ராம்சார் தல எல்லை வரையறையானது, குறிப்பிட்ட சர்வே எண்களுடன் ஒப்பிட்டு பரப்பளவை வரையறுப்பது, நில உண்மைகண்டறிதல்" சோதனை மற்றும் அறிவிப்பு ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும். ராம்சர் தலம் அமையும் நிலங்கள் இன்னும் புல எண்களுடன் குறிப்பிடப்பட்டு வரையறுக்கப்படாததால், தற்போதைய பள்ளிக்கரணை சதுப்பு நில காப்புக்காட்டு எல்லைகளுக்கு வெளியே உள்ள தனியார் பட்டா நிலங்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட அலுவலர்களால் ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வட கிழக்குப் பருவமழை:

# சென்னை மாநகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## மேயர் பிரியா ஆய்வு!

சென்னை, அக்.28-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நேற்று (27.10.2025) மேயர் திருமதி. ஆர்.பிரியா, அண்ணாநகர் மண்டலம், வார்டு 106க்குட்பட்ட அரும்பாக்கம் மெட்ரோ அருகில் தமிழர் வீதி, இந்திரா காந்தி பாலம் பகுதியில் செல்லும் விருகம்பாக்கம் கால்வாயில் மழைநீர் சீராக செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி மற்றும் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109, நமச்சிவாயபுரம் பாலம் அருகே விருகம்பாக்கம் கால்வாய் கூவம் ஆற்றுடன் இணையும் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு -117க்குட்பட்ட அண்ணா சதுக்கம் அருகே கூவம் ஆறு கடலில் கடக்கும் முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு, மழைநீர் தங்குதடையின்றி கடலில் கலப்பதற்கான பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஒன்றியம் கொடிவலாசா அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் நடைப்பெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம் என 46 அரசு சேவைகளுக்கு பொதுமக்கள் மனு அளித்ததும் உடனடியாக கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பொருட்கள் அடங்கிய தொகுப்பு, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துகள் அடங்கிய தொகுப்பு, வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைப் பைகள் உள்ளிட்டவைகளை வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் பி.டி.சந்திரன் உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.



விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்றதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு வெற்றி பெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் அன்னியூர்சிவா எம்.எல்.ஏ. சென்னைமகாபலிபுரத்தில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி! வெற்றிவாக்குச்சாவடி நிகழ்ச்சியில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### நம் திட்டத்தையும் – இலக்கையும் கழகத்தினரிடம் கொண்டு செல்லுங்கள்

# களப்பணியில் கலைஞரின் உடன்பிறப்புகளை வெல்ல எவரும் இல்லை என காட்ட வேண்டிய தருணம் இது!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.29-

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

களப்பணியில் கலைஞரின் உடன்பிறப்புகளை வெல்ல எவரும் இல்லை எனக் காட்ட வேண்டிய தருணம் இது...

இன்று நாம் வகுத்த திட்டத்தையும், நிர்ணயித்துள்ள இலக்கையும், எனது message ஐயும் தமிழ்நாடெங்கும் உள்ள நமது கட்சியினரிடம் சென்று சொல்லுங்கள்.

'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என நம் ஒவ்வொருவரின் வாக்குச்சாவடியிலும் வெல்வோம்! ஏழாவது முறை வாகை சூடி வரலாறு படைப்போம்!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### லட்சக்கணக்கான பயனாளிகள் பயன்பெறும் வகையில்

# தென்காசியில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

தென்காசி.அக்.29-

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் இன்று (29ஆம் தேதி)

தென்காசியில் நடைபெறும் அரசு நிகழ்வில் பங்கேற்று லட்சக்கணக்கான பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுக்கு இன்று தென்காசி செல்லும் வழியில் காலை 830 மணி அளவில் ஆலங்குளத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் இன்று (29 ஆம் தேதி)முக்கூடல் அரியநாயகிபுரத்தில் இருந்து காலையில் புறப்பட்டு தென்காசியில் அரசு விழா நடைபெறும் தென்காசி விளக்கு ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வரும் வழியில் நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் தொகுதி,தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி, கடையநல்லூர் தொகுதிகள், தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் தொகுதிகள் ஆகிய கழக மாவட்டங்களை உள்ளடக்கிய 5 சட்டமன்ற தொகுதிகள் சார்பில் சுமார் 25000 பேர்கள் கலந்து கொண்டு சிறப்பான மற்றும் உற்சாகமான வரவேற்பு ஙநகழ்ச்சி.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. தொடர்ந்து அடுத்தடுத்து சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில் கழக நிர்வாகிகள்,கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.முதலமைச்சர் அவர்களை உற்சாகமாக வரவேற்கும் அடிப்படையில் தென்காசி மாவட்டம் முழுவதும் சாலையின் இரு புறங்களும் கழக இரு வண்ணக் கொடிகள்,அரசின் திட்டங்களை விளக்குகின்ற வகையில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டுள்ளது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் காலை 11 மணியளவில் தென்காசி மாவட்டம் சீவநல்லூர் சென்று அங்கு கலைஞர் அவர்களின் கனவு இல்லம் திட்டத்தை தொடங்கி வைத்துவிட்டு 11.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு

அரசு விழா நடைபெறும் ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வருகிறார்கள்.

"சொன்னதைச் செய்வோம்" "செய்வதைத்தான் சொல்லுவோம்"என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிக்கிணங்க "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற அடிப்படையிலும், முடிவுற்ற அரசு திட்டப் பணிகளை தன்னுடைய திருகரங்களால் துவக்கி வைத்தும்,புதிய திட்டப் பணிகளை அறிவித்தும்,விழாவில் சிறப்பான பேருரையாற்றி சிறப்பிக்கிறார்கள்.

விழா நடைபெறும் ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானம் தென் மாவட்டங்களில் முதன்முறையாக ஜெர்மன் தொழில்நுட்ப தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.பந்தலை சுற்றி காம்பவுண்ட் சுவர் போன்று தடுப்புகள் அமைக்கப்பட்டு அவற்றில் அரசின் சார்பில் 50 க்கும் மேற்பட்ட திட்டங்கள் படகாட்சிகளுடன் விளக்கும் வகையில் விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளது.

மேலும் 25,000 பேர்கள் அமரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் முதலமைச்சர் அவர்கள் பகல் 12.30 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு 12. 45 மணிக்கு ஆய்குடி அமர்சேவா சங்கம் செல்கிறார்கள்.

அதன் பின்னர் அங்கிருந்து 1.30 மணி அளவில் புறப்பட்டு

குற்றாலம் சுற்றுலா மாளிகை சென்று தங்குகிறார்கள்.

பின்னர் மாலை 5 மணி அளவில் முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு மதுரை சென்று இரவு தங்குகிறார்கள்.

நாளை காலை (30.10. 2025) அன்று முதலமைச்சர் அவர்கள் 7.45 மணிக்கு கோரிப்பாளையம் சென்று அங்கு தேவர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு, 8 மணிக்கு தெப்பக்குளம் சென்று அங்கு மருது பாண்டியர் அவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி விட்டு,

அதன் பின்னர் அங்கிருந்து 8.10 மணிக்கு புறப்பட்டு 9.30 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம் கமுதி பசும்பொன் சென்று அங்கு தேவர் அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பின்பு மதுரை சென்று விமானம் மூலம் சென்னை வருகிறார்.



திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வி.கே.மாஹில் தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபி இல்ல திருமண விழா நடைபெற்றது. இதில் கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, கழக அமைப்பு துணை செயலாளர் ஆஸ்டீன், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், பகுதிச் செயலாளர்கள் வை.ம.அருள்தாசன், புழல் எம்.நாராயணன், எம்.எஸ்.நாகலிங்கம், ஈரோடு இறைவன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, முரசொலி மூர்த்தி, வண்ணை நாகமணி, தச.கரிகாலசோழன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், சைலஸ், ரஜினி பாபு, டி.ஜி.ஆர்.மணிவண்ணன், கேபிள் த.வேல்கணேசன், சி.எஸ்.எஸ்.டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.